## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.
## CC. No. 59/2016

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09–ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி–5(PW–5)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **சக்திவேல்** | தொழில் | | **சுயதொழில்** |
| த/பெ. | : | **சங்கரண்** | ஊர் | | **துவாக்குடி** |
| வயது | : | 49 | மாவட்டம் | | **திருச்சி** |

**09.10.2025**

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். காணொலி காட்சி மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :**

1) நான் துவாக்குடியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது இரண்டாவது கையொப்பம் தங்கராஜ் என்வருடையது,

2) கடந்த டிசம்பல் 2015 வருடம், காணொலி காட்சி மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியுள்ள எதிரி போலி நகையை துவாக்குடி முத்துமாரி பேங்கில் அடகு வைத்து சென்றுவிட்டார். 2016 மே மாதத்தில் அந்த வழியாக எதிரி சென்றபோது முத்துமாரி பேங்கு உரிமையாளர் சுதாகரும், நனும், தங்கராஜ் என்பவரும் எதிரியை மடக்கி பிடித்து துவாக்குடி காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். போலீசார் அவரை சோதனை செய்ததில் திருக்காட்டுப்பள்ளி ரசீதுகளி இரண்டு இருந்தன. ஆண்டவர் மற்றும் பழநிமுருகன் பைனான்ஸ் என்ற பெயரில் அந்த ரசீதுகள் இருந்தது.

3) எதிரி வண்டியில் தான் வாந்தார் அந்த வண்டியின் டுல்ஸ் பாக்ஸில் 9 போலி நகைகளும், 30,000 ரூபாய் தனியாகவும் 60,000 ரூபாய் தனியாகவும் இரண்டு கட்டுகளாக இருந்தன. திருக்காட்டுப்பள்ளி போலீஸ் அங்கு வந்திருந்தார்கள். போலீசார் நகை மற்றும் பணத்தை கைப்பற்றினார்கள். சாட்சி கையொப்பொம் கேட்டார்கள். நான் போட்டேன். **(ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் முறையே அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நானும் தங்கராஜம் சுதாகரும் எதிரியை முத்துமாரி பேங்கு முன்பு பிடித்தோம். ரோட்டில் வருபவரை நாங்களாக மடிக்கி பிடித்தோம் என்றால் ஆமாம். அதை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் சலுன் கடை வைத்துள்ளேன். எதிரி அப்பாச்சி வாகனத்தில் வந்தார். பதிவு எண் தெரியவில்லை. எதிரியின் பெயர் மாதவன். போலீசார் சொல்லிதான் எதிரியின்

பெயர் தெரியுமா என்றால், போலீசார் அங்கு விசாரிக்கும்போது எனக்கு தெரிந்தது.

2) திருக்காட்டுப்பள்ளி போலீசார் எவ்வளவு பணம் கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிடித்ததற்காக சாட்சி கையொப்பம் போட்டேன். நகை கடை வைத்துள்ள சுதாகர் என்து நண்பர். நான் சொல்வது போல் எதிரியை பிடிக்கவில்லை என்றும் சுதாகர் எனது நண்பர் என்பதற்காக அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) துவாக்குடி போலீசார் என்னை விசாரித்தார்கள். திருக்காட்டுப்பள்ளி போலீஸ் என்னிடம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்காக கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./—எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 59/2016</u>

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09–ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி–6(PW–6)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **தங்கராஜ்** | தொழில் | | **சுயதொழில்** |
| த/பெ. | : | **தவசி** | **ஊர்** | | **பழங்கனாங்குடி** |
| வயது | : | 49 | மாவட்டம் | | **திருச்சி** |

**<u>09.10.2025</u>**

**<u>எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். காணொலி காட்சி மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். வழக்கறிஞர் ஆஜர்.</u>**

**முதல் விசாரணை :**

**நான்** பழங்கனாங்குடியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது முதலாவது கையொப்பம் சக்திவேல் என்வருடையது,

2) கடந்த டிசம்பர் 2015 வருடம், காணொலி காட்சி மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியுள்ள எதிரி போலிசெயினை துவாக்குடி முத்துமாரி பேங்கர்ஸில் அடகு வைத்து 30000 பணம் வாங்கி சென்றுவிட்டார் (**சாட்சி எதிரியை அடையாளம் காட்டுகிறார்,)** 2016 மே மாதத்தில் அந்த வழியாக அப்பாச்சி இருசக்கர வாகனத்தில் வந்த எதிரியை முத்துமாரி பேங்கு உரிமையாளர் சுதாகரும், நானும், சக்திவேல் என்பவரும் பிடித்து துவாக்குடி காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். போலீசார் அவரை விசாரணை சொய்த போது எதிரி திருக்காட்டுப்பள்ளியில் ஆண்டவர் மற்றும் பழநிமுருகன் அடகு கடைகளில் போலி நகைகளை வைத்து பணம் பெற்றதாக எதிரி போலீசாரிடம் சொன்னார். எதிரி அவரது வண்டியில் வண்டியின் டுல்ஸ்பாக்ஸில்– 9 போலி நகைகளும், 30,000 ரூபாய் தனியாகவும் 60,000 ரூபாய் தனியாகவும் இரண்டு ரசீதுகளும் இருந்தன.

3) அதை போலீசார் கைப்பற்றிவிட்டு எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். **(ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் முறையே அ.சா.ஆ.7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1) நான் முதல் விசாரணையில் சங்கதிகள் அனைத்தும் போலீசார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால், எதிரி போலீசாரிடம் சொன்னார், போலீசார் என்னிடம் சொன்னார்கள். எதிரியை நாங்கள் தான் பிடித்தோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அப்பாச்சி

வாகனத்தில் வந்தார். பதிவு எண் தெரியவில்லை. நான் போட்டோ ஸ்டுடியோ கடை வைத்துள்ளேன். முத்துமாரி பேங்கர்ஸ் அருகில் வைத்துள்ளேனா என்றால் ஆமாம். முத்துமாரி பேங்கர்ஸ் வைத்துள்ள சுதாகர் என்து நண்பர்.

2) போலி நகையை அடகு வைத்தார் என்ற சங்கதி சுதாகர் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றும், எனக்கு நேரடியாக தெரியாது என்றும் சொன்னால் சரிதான். திருக்காட்டுப்பள்ளி போலீசார் எவ்வளவு பணம் கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது. திருக்காட்டுப்பள்ளி போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்று ஞாபகம் இல்லை. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்காக கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./—எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு..